மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 12 புதன்கிழமை 28.08.2024 கதிர் 345







# ஜனாதிபதித் தேர்தல் பரபரப்பில் ஜெனிவாவை மறக்க வேண்டாம்!

- தமிழ்த் தேசியத் தரப்பினருக்கு ரெலோ கோரிக்கை
- உயர் ஸ்தானிகர் அலுவர்களுடனும் பேச்சுவார்த்தை

நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் பரபரப்புக் களில் தமிழ் மக்களின் பிரதான விடயமான ஜநா அமர்வுகளைப் புறந்தள்ளி விட வேண்டாம் என ரெலோ கோரிக்கை விடுத்துள்ளது. எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஜநா மனித உரிமைப் பேரவையின் 57 ஆவது அமர்வு நடைபெற இருக்கும் இவ்வேளையில் ஜநா மனித உரிமை உயர் ஸ்தானிகரின் அறிக்கை மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்கப் பட்டிருப்பதையும் ரெலோ சுட்டிக்காட்டியுள்ளது.

தமது தரப்பில் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு சமர்ப்பிப்பதற்கான அறிக்கையின் மாதிரி வடிவம் அனைத்து கட்சி தலைவர்களுக்கும் பல நாட்களுக்கு முன்னரே தம்மால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் ரெலோ தெரிவித்துள்ளது.

2➤





## தேர்தல் ஆணைக்குழு அனுமதியுடன் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம்

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேர்தல் ஆணைக் குழுவின் விசேட அனுமதியுடன் இன்று இடம்பெற்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோரின் இணைத் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இதன்போது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், முப்படை உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## அபிவிருந்தி நிதி எம்.பி.க்களுக்கு நேரடியாக வழங்கப்படுவதில்லை

### விளக்கமளிக்கிறார் சுமந்திரன்



அபிவிருத்தி பணிகளுக்காக பணம் ஜனாதிபதி செயலகத்தால் நேரடியாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்றதே தவிர எந்த நாடாளுமன்ற உறுப்பிருக்கும் நேரடியாக கொடுக்கப்படவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுடன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், தமிழ் தேசிய கூட்டமைப்பு (இலங்கை தமிழ் அரசுக் கட்சி) நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாக பெரியளவிலான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிதியானது குறிப்பிடப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டது போன்ற தோற்றப்பாடு வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகின்றது.

பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிதி, மற்றும் பல்வேறு அபிவிருத்தி நிதிகள் ஜனாதிபதி செயலாகத்தால் இவ்வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கு உதவியாக அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களால் அபிவிருத்திக்காக முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்தன.

இக் கோரிக்கைகளின் அடிப்படையில் வெவ்வேறு தொகைகள் ஜனாதிபதி செயலாகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணங்கள் மேற்சொன்ன அபிவிருத்தி பணிகளுக்காக

2➤

## சுதந்திரக் கட்சி செயலாளரினால் ஆதாரங்களை தர முடியவில்லை

### அங்கஜன் இராமநாதன் விசனம்

மதுபானசாலை அனுமதியை நான் பெற்றதாக கூறிய சுதந்திர கட்சியின் செயலாளர் எந்த ஆதாரத்தையும் முன்வைக்கவில்லை. இவ்வாறான கதைகளுக்கு பதில் சொல்லப்போனால் அவர்களது நிலைக்கு நாம் தரமிறங்கவேண்டும்என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விசனம் வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற இளையோருடனான கேள்வி பதில் நிகழ்ச்சியொன்று கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மதுபான சாலை விவகாரம் தொடர்பாக இம்முறை தேர்தலில் அதிகம் விவாதிக்கப்படுகிறது. ஆதாரங்களற்ற விவாதங்களாகவே அவை காணப்படுகின்றன.

தேர்தல் பிரசாரங்களில் ஒருவரை ஒருவர் சேறுபூசும் தன்மை காணப்படுகின்றது.

எனது சுதந்திரக் கட்சியின் செயலாளர் தனிப்பட்ட நோக்கங்களுக்காக, நான் எனது மக்களுக்காக ஒரு தீர்மானத்தை எடுத்துவிட்டேன் என்ற

2➤

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு -

'கடந்த வாரம் உயர்ஸ்தானிகராலய அலுவலர்களுடன் இணைய வழியில் நடைபெற்ற சந்திப்பில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன், மற்றும் பிரான்ஸிலிருந்து ஏற்பாட்டாளர் மகேந்திரன் குலராஜ் ஆகியோர் கலந்து கொண்டு இருந்தனர். இன்னோரன்ன காரணங்களினால் மற்ற கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ள முடியவில்லை.

இருப்பினும் சந்திப்பில் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட கலந்து கொண்டவர்கள் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களின் தற்போதைய நிலை, தொடர்ந்தும் மீறப்பட்டு வரும் மனித உரிமை விடயங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தனர். மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்க தயாராகி இருந்த ஐநா மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அறிக்கையும் அதில் கலந்துரையாடப் பட்டிருந்தது. எதிர்வரும் மனித உரிமைப் பேரவையின் அமர்வுக்கு முதலாக எமது தரப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது மிகவும் அவசியமாகும்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் மெத்தனப் போக்கும் அதனால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்கொண்டு வரும் பிரச்சனைகளையும் சர்வதேசத்துக்கு சொல்வதற்கு நாங்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளோம். அதில் பொது வேட்பாளரும் ஒரு பொறிமுறையாக கையாளப்படுகிறது.

இந்த நேரத்தில் மனித உரிமை பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடர் எமது பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கான மிகப் பிரதான தளமாக அமைந்திருக்கிறது. சர்வதேச நாடுகள் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்ற மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரை ஜனாதிபதி தேர்தல் விடையங்களினால் நாம் மறந்து விடல் ஆகாது.

யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றோடு எமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியைப் பெற்றுக்கொள்ள ஐநாப் பொறிமுறை மற்றும் மனித உரிமை பேரவையின் நடவடிக்கைகளில் மனந்தளராது தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டு காத்திருக்கும் எமது மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற எமது காத்திரமான தொடர் நடவடிக்கைகள் அவசியமாகும்.

மிகக் கடினமான தேர்தல் விடயங்களை கையாளும் பொழுதிலும் எமது இன நலன் சார்ந்த பிரதானமான ஐநா மனித உரிமைப் பேரவை கூட்டத் தொடரில் எமது மக்கள் சார்பாக அறிக்கைகள் இடம் பெறுவது தேர்தல் நலன்களையும் தாண்டி முக்கியமானதாகும்.

ஆகவே அனைத்துத் தமிழ்த் தேசியப் பரப்பிலும் பணியாற்றிக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் பொது அமைப்புகள் ஆகியோரை இந்த பேரவை கூட்டத் தொடருக்கான அறிக்கை சமர்ப்பிக்கும் எமது முயற்சியில் கைகோர்க்குமாறு வினயமாக வேண்டுகிறோம்" என்று ரெலோவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அபிவிருத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேரடியாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்றதே தவிர எந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் நேரடியாக கொடுக்கப்படவில்லை.

அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற தவறான விஷமப் பிரசாரங்கள் காரணமாக இவ்வறிக்கை வெளியிடப்படுகின்றது" என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



## ரணிலுக்கு எதிரான மனு தள்ளுபடி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதற்கான தகுதியை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம் , வழக்காளி ரூ. 50,000 செலவுத்தொகையை செலுத்தவும் உத்தரவிட்டுள்ளது

## அவுஸ்திரேலியாவில் தமிழ் இளைஞர் தற்கொலை

*அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரிய இலங்கையை சேர்ந்த மனோ தமிழ் இளைஞர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.*

*அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் புகலிடக்கொள்கையே அவரின் மரணத்திற்கு காரணம் என தமிழ் அகதிகள் பேரவை குற்றஞ்சாட்டியுள்ளது.*

*தன்னைத்தானே தீக்கிரையாக்கிக்கொண்டு குறிப்பிட்ட இளைஞன் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*23 வயதேயான இந்த இளைஞனை ஆஸ்திரேலியா அரசாங்கமும், அரசாங்கத்தின் அகதிகள்மீதான மோசமான கொள்கைகளுமே படுகொலை செய்துள்ளது தமிழ் அகதிகள் பேரவை தெரிவித்தது.*

## சுதந்திரக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடிப்படையில் ஜனாதிபதி வேட்பாளர் இருக்கும் அரசியல் மேடையில் இதனை தெரிவித்தார்.

நானே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கை சின்னத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரே நாடாளுமன்ற உறுப்பினர். நான் போகும் இடமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செல்லும் இடமாக பார்க்கப்படும்.

அவருடைய தேவை என்னை ஒரிடத்தில் சேர்க்கவேண்டும் என்று இருந்தார். சேராத இடத்தில் இவ்வாறு கதைகள் வருகிறது. ஆனால் அதற்கு எந்த ஆதாரத்தையும் முன்வைக்கவில்லை. இவ்வாறான கதைகளுக்கு பதில் சொல்லப்போனால் அவர்களது நிலைக்கு நாம் தரமிறங்கவேண்டும்" என்று அங்கஜன் தெரிவித்தார். (O1).

## தமிழ்ப் பொது வேட்பாளரால் சர்வதேசத்துக்கும் அழுத்தம்!

### சிவஞானம் சிறிதரன் விளக்கம்

*தமிழ்ப்பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டிருப்பது சர்வதேசத்துக்கும் அழுத்தத்தைக் கொடுத்திருக்கின்றது என்று தெரிவித்துள்ள தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், "பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறங்கியிருப்பதால் சர்வதேச சமூகம் எம்மிடம் வந்து எதற்காக பொது வேட்பாளரை களமிறக்குகின்றீர்கள், என்ற கேள்வியை எழுப்புகின்றார்கள்" என்றும் தெரிவித்தார்.*

*யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் இளைஞர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே சிவஞானம் சிறிதரன் இதனைத் தெரிவித்தார்*

*நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் செல்வராஜா கஜேந்திரன், ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் உமா சந்திரா பிரகாஷ், வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சிறிதரன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.*

*இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய சிறிதரன், தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டது எதற்காக என்பதையிட்டும், அதன் பின்னணியில் உள்ள அரசியலையும் விளக்கினார்.*

*சிறிதரன் தனது உரையில், ''2010 இல் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தோம். பின்னர் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கினோம். பின்னர் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்தோம். இவை அனைத்திலும் நாம் தோற்றுப்போனதுதான் அதிகம். அதனால் நாம் இல்லளவு காலமும் கண்ட தோல்விகளின் அடிப்படையில் தான் நாம் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தியுள்ளோம்" என்று தெரிவித்தார்.*

*"பொது வேட்பாளர் என்பவர் ஒரு தனிநபரல்ல. அவர் ஒரு குறியீடு. எமது கோரிக்கைகளை வலியுறுத்தி சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தி நாம் அவரை களமிறக்கியுள்ளோம்" என்றும் தெரிவித்த சிறிதரன், 'பொது வேட்பாளரை எதற்காக களமிறக்கினீர்கள்? என்று சவர்வதேச சமூகம் இன்று எம்மைக் கேட்கின்றது. அதாவது, இது சர்வதேசத்துக்கும் அழுத்தத்தைக் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றது" என்றும் தெரிவித்தார்.*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஐ.நா.வில் இலங்கை குறித்து புதிய பிரேரணை அவசியம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

எதில்வரும் செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் உரிமைகள் மாநாட்டில் இலங்கை தொடர்பாக புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவிருக்கின்ற கூட்டத் தொடரில் புதிய பிரேரணை ஒன்றை முன்வைக்காமல், ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கான காலத்தை நீடிக்க வேண்டும் என்று பிரதான நாடுகள் தீர்மானித்துள்ள நிலையிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

ஜெனீவாவில் செப்டம்பரில் நடைபெறவுள்ள மாநாட்டில் ஐக்கிய நாடுகள் உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்படவுள்ள அறிக்கையின் முதல்பிரதி அண்மையில்வெளியானது. அந்த அறிக்கையில், இலங்கையில்மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்கான புதிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளது என்பதை மனித உரிமைகள் ஆணையாளர் வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வாறான நிலையில், சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் மற்றும் தனி மனித சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள புதிய அச்சுறுத்தல்களை மையப்படுத்தி, அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு, பொதுமக்களின் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்ட ஒழுங்குகள் கிடைக்கப பெற்றுள்ளன. அத்துடன் மேலும் பல மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்கு எதிரான அச்சுறுத்தல்கள் மேலோங்கி இருக்கின்றன என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள், காத்திரமான புதிய பிரேரணை ஒன்றை இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக மனித உரிமைகள் மாநாட்டில் முன்வைக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

# சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி விஞ்ஞான தினம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி உயர்தர மாணவர்கள்ஒழுங்குசெய்திருந்த "விஞ்ஞான தின" நிகழ்வுகள் அண்மையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக இரசாயனவியல் துறை பேராசிரியர் கலாநிதி மீனா செந்தில்நந்தனன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.






# மிதி வெடி

என்ன சத்தம் எல்லாம் கொஞ்சம் ஒய்ஞ்சு போய் கிடக்கு.... "சொல்லுறவை சொன்னால் கேப்பாருக்கு என்ன மதி?" எண்டு இதைத் தான் சொல்லுறவை பாருங்கோ.... எங்க தொடங்கி எங்க வந்து நிக்குது பாத்தியளே?

ஆரம்பத்தில இருந்து நான் சொன்னனான் தானே? ஆர்வக் கோளாறு... ஆளைக் கொண்டு போய் எங்கயோ விடப்போகுதெண்டு நான் முந்தி இருந்தே சொல்லிக் கொண்டு தான் வாறன்... ஆர் எவரெண்டு இல்ல.... ஆட்டைக் கடிச்சு.... மாட்டைக் கடிச்செண்டு கடைசியில வாய் வைக்காத ஆள் இல்லை எண்டு வந்துட்டுது.....

அமைச்சர்.... ஐயா... எண்டு கொண்டு புராணம் பாடின கொஞ் நாளிலயே அவர் "துரோகி" ஆகிட்டார். "ஆர் வராட்டில் என்ன... நான் இருக்கிறன் ....." எண்டு சொல்லி "ஓவர் நைட்ல ஒபா-மா" ஆகிறன் எண்டு வெளிக்கிட்ட சட்டத்தம்பிக்கும் "பெப்பே"... இப்ப கடைசிய ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் எண்டு வந்து நிக்குது....

நீங்கள் நினைக்கிறியளே உது பைத்தியக்காரத் தனம் எண்டு..... உங்கள் எல்லாரையும் பைத்தியமாக்கிற வேலை பாருங்கோ... எல்லாம் "பிளானோட" தான்.. ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா? நடக்காதா எண்டு கதை அடிபடத் தொடங்கேக்கயே தம்பி தன்ர சண்டப் பிரசண்டத்தைத் தொடங்கீற்றான் பாருங்கோ......

மூச்சுக்கு முந்நூறு தரம் நான் ஒரு "குவாலிபைஃட் மெடிக்கல் அட்மின்" எண்டு சொல்லுறவருக்கு... "அட்மினிஸ்ரேசன்" தெரியவே இல்லை. விசாரணைக்காகவோ என்னவோ "ட்ரான்ஸ்பஃர்" எண்டு குடுத்த பிறகு பழைய "போஸ்ட்"ஐ எப்பிடிக் "க்ளைம்ப்" பண்ண ஏலும்? அதை விட தான் "ஸ்ரெஸ்" ஆ இருக்கிறதால திகதி போட்டு லீவு தாங்கோ எண்டு எழுதிப் போட்டு அரசியல் பேசப் போறாராம்..... எப்பிடி இருக்குது பாத்தியளே? அரசாங்கத்தில வேலை செய்யுற ஆக்களுக்கெண்டு இருக்கிற "அரசாங்க தாபன விதிக் கோவை" தெளிவாச் சொல்லி இருக்குது பாருங்கோ.... ஒரு அரசாங்க வேலைகாரன் எப்பிடி, எப்பிடி எல்லாம் அரசியல் செய்யலாம் - அரசியல் பேசலாம் எண்டு....

இதுக்குள்ள வேடிக்கை என்னெண்டா.... "வெல்லுற குதிரையில தான் நான் பந்தயம் கட்டுறன்" எண்டது தான்.... இந்தப் பொம்பிள டாக்குத்தரோட "டீல்" பேசினது.... பிறகு முஸ்லீம் தலைவர்களோட போய் மேடையில நிண்டது... எல்லாம் பம்மாத்துப் பாருங்கோ.... இப்ப கடைசியா யாழ்ப்பாணம் உட்பட வடக்கில அந்தாளுக்கு நான் தான் எல்லாமே எண்டு "லைஃவ்" வேற விட்டு வாங்கிக் கட்டியிருக்கிறார்.

அது வேற ஒண்டுமில்லப் பாருங்கோ.... என்னதான் "டெவலப் மென்ற்", வாய்ப்பு, வசதிகள் எண்டு குடுத்தாலும் யாழ்ப்பாணச் சனம் பழசொண்டையும் மறக்காது எண்டது சிங்களத் தலைவர்கள் அத்தனை பேருக்கும் தெரியும்.... அப்பிடியிருக்கேக்க தனக்கு எதிரான வாக்கெல்லாம் மற்றவருக்கு விழுந்துடுமோ எண்டு பயந்து போன "அவர்", உந்த "அலப்பறை"யைப் பிடிச்சு "இவருக்கு" ஆதரவா இருக்கிறமாதிரி ஒரு "கேம்" ஆடுறார் எண்டு கதைக் கினம்.....

வடக்கில "அவருக்கு" வாக்கு விழுகுதோ இல்லையோ "இவருக்கு" விழுகிற வாக்கு குறைஞ்சால் போதும் எண்டது தான் இப்பத்த "லேட்டஸ் டீல்" எண்டு பறையினம். "பிளான்" பண்ணின படி வடக்கின்ற முதலாவது சுற்றில "இவருக்கு" வாக்குக் குறைஞ்சால் "உவரைப்" பக்குவமாப் பாதுகாத்து "பக்" பண்ணி அனுப்புறதுக்கு சம்மதிச்சிருக்கிறாராம் "அவர்".

உந்தக் குத்துவெட்டுக்குள்ள நமக்கெதுக்கு வீண் வம்பை? நடக்கிறதைக் கண்டு கொள்ளுவம்.... நாங்கள் ஆருக்கு வாக்குப் போடுறது எண்டதை நாங்கள் தானே தீர்மானிக்கப்போறம்? ஆர், ஆரோட "டீல்" பேசினால் எங்களுக்கென்ன?

இங்கால ஒருபக்கத்தால சங்குச் சத்தம் சாடையாக் கேக்குது... அதுக்குள்ள உந்தப் பைத்தியத்தின்ர அலப்பறையள ஆர் பாக்கப் போகினம்?

எடுத்து வைச்சிருக்கிற "லண்டன் விசா" வுக்கு வேலை இருக்குதா... இல்லாட்டில் உள்ளூரிலயே வேலை இருக்குமா எண்டு செம்ரெம்பர் 22 ஆம் திகதி எல்லாம் தெரியத் தானே போகுது?

பொறுத்திருங்கோ... பாப்பம்...!!

நரமுனி

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் பரந்தனில் திறப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் பரந்தன் பகுதியில் இன்று காலை திறந்து வைக்கப்பட்டது. கட்சியின் கிளிநொச்சி தொகுதி பிரதான அமைப்பாளர் ம.மரியசீலன் தலைமையில் நடைபெற்றை நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் வடமாகாண பிரதான அமைப்பாளர் உமா சந்திரா பிரகாஸ் கலந்து கொண்டு கட்சி அலுவலகத்தை திறந்து வைத்தார் .நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய உமா சந்திரா பிரகாஷ், “யுத்தம் நிறைவடைந்ததற்கு பின்பு வடமாகாணத்தின் மக்களின் வாழ்வாதாரம்,கல்வி உள்ளிட்ட விடயங்கள் கட்டியெழுப்ப வேண்டும். ஜனவரியில் சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை சஜீத் பிரேமதாஜ நடாத்தவுள்ளார். இதன் மூலம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதுடன் 30 வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கையும் கட்டியெழுப்ப முடியும்” என்றும் தெரிவித்தார்.

“13 வது திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்தப்படும்” என்றும் தெரிவித்த உமா சந்திரா பிரகாஷ், பெண்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் பல உள்ளதாகவும் தெரிவித்தார்.

‘நாடு கடன் சுமையில் உள்ளது. இதற்கான நிவாரணத்தை கொடுக்காத ஜனாதிபதி உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போட்டு நீதிமன்றில் குட்டு வாங்கியுள்ளார்” என்றும் அவர் குறிப்பிட்டார (113)



# அதிகாரப் பகர்வு இல்லை என்பதில் உறுதியாக உள்ளது நாமல் மட்டுமே

## மொட்டு அணியின் பிரமுகர் சொல்கிறார்

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை செயற்படுத்தக் கூடாது என்பதிலும், மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்கக் கூடாது என்பதிலும் நாமல் ராஜபக்ஷ உறுதியாக இருக்கின்றார் என்று பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கல்கமுவவில் நடைபெற்ற ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே திஸ்ஸ குட்டியாராச்சி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ குட்டியாராச்சி மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் முதலாவது பணி தேசியப் பாதுகாப்பாகவே இருக்க வேண்டும். இதன்படி 30 வருட யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தவர் மகிந்த ராஜபக்ஷவே. 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் என்பது மாகாணங்களுக்கான அதிகாரங்களே ஆகும். இதன்படி வடக்கு மாகாண சபைக்கு தனியான பொலிஸை அமைக்க முடியும். அவர்களுக்கென தனியா சட்டத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியும்.

இதனால் நாமல் ராஜபக்ஷ மட்டுமே 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை செயற்படுத்தப் போவதில்லை என்றும், அதிகார பகிர்வை செய்யப் போவதில்லை என்றும் உறுதியாகக் கூறியுள்ளார். இதனாலேயே நாங்கள் அவருக்கு வாக்களிக்கின்றோம்.

எரிபொருள், எரிவாயு வரிசைகள் நாட்டின் பிரச்சினைகளில் சின்னப் பிரச்சினைகளே.

ஆனால்யுத்தத்தை தோற்கடித்து வெற்றிகொண்ட நாட்டை எழுதிக்கொடுப்பதற்கு

எதிராக நாமல்ராஜபக்ஷ மட்டுமே இருக்கின்றார். மகிந்தவின் மகன் என்பதனால் நாங்கள் அவருக்கு வாக்களிப்போம்” என்றும் அவர் தெரிவித்தார்.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மக்கள் பணிமனை திறந்து வைப்பு




(மாளிகைக்காடு செய்தியாளர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சாய்ந்தமருதுக்கான மக்கள் பணிமனை திறப்பு விழா சாய்ந்தமருது -11 கல்யாண வீதியில் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினரும் முன்னாள் பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.எல். சலீம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் மக்கள் பணிமனையை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கட்சியின் தவிசாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்எஸ் அமீர் அலி, கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு தலைவரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான கே.அப்துல் றஸாக், முன்னாள் பிரதேச சபை தவிசாளர்களான எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர், எம்.ஏ. அன்சில், எம்.ஐ.எம். மாஹிர், கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் ரிஷ்லி முஸ்தபா, உயர்பீட உறுப்பினர் எம்.எஸ்.முபீன் ,கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், கட்சியின் போராளிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கல்முனை தொகுதி தேர்தல் குழு தலைவராக ஹரீஸ் நியமனம்

(நூருல் ஹுதா உமர்)

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள கல்முனை தேர்தல் தொகுதியின் தேர்தல் நடவடிக்கை செயற்குழு தலைவராக பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம். எம்.ஹரீஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீமின் தலைமையில் மருதமுனை தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசாவின் கல்முனை தொகுதியில் வெற்றியை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்கள், பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பி னர்கள், உள்ளூராட்சி சபை முன்னாள் உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் பிரதேச அமைப்பாளர்கள், வேட்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# சஜித் பிரேமதாச மட்டும்தான் வெற்றிக்கு அருகில் உள்ளார்!

## டலஸ் அழகப்பெரும வெளியிடும் கணிப்பு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச மாத்திரமே வெற்றிக்கு அருகில் இருப்பதாகவும் ரணில் விக்ரமசிங்க மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் வெற்றி பெறுவதற்கு புதிதாக 40 இலட்சம் வாக்குகளை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும்நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெறுவதற்கு கிட்டத்தட்ட 60 இலட்சம் புதிய வாக்குகளைப் பெற வேண்டும் எனவும் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவிக்கையில், "எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 171 இலட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அவர்களில் 140 இலட்சம் மக்கள் வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்க முடியும். இதில் ஜனாதிபதியாவதற்குத் தேவையான 50 வீதத்தினை பெற்றுக்கொள்வதற்கு 70 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்" என்று தெரிவித்தார்.

"ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த பொதுத் தேர்தலில் 2,49,000 வாக்குகளை பெற்றுக் கொண்டார்" என்று தெரிவித்த டலஸ் அழகப்பெரும, "69 இலட்சம் வாக்குகளில் 40 வீதம் ரணில் விக்ரமசிங்கவுக்கு கிடைத்தால் அது 27 இலட்சமாக இருக்கும். அதிகபட்சமாக ரணில் விக்ரமசிங்கவுக்கு 30 இலட்சம் வாக்குகள் கிடைக்கும்" என்றும் கணக்குத் தெரிவித்தார்.

"கடந்த முறை அநுரகுமார திசாநாயக்கவுக்கு 4,18,000 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. அவர் 70 இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கு இன்னும் 65 இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று சுட்டிக்காட்டிய டலஸ் அழகப்பெரும, "11 இலட்சம் புதிய வாக்காளர் இத்தேர்தலில் வாக்களிக்கவுள்ள நிலையில் அதிலிருந்து ஒரு பகுதி இவருக்கு கிடைக்கும். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திசாநாயக்க வெற்றி பெறுவதற்கு கிட்டத்தட்ட 60 இலட்சம் புதிய வாக்குகளைப் பெற வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு 55 இலட்சம் வாக்குகள் கிடைத்தன" என்று சுட்டிக்காட்டிய டலஸ் அழகப்பெரும, "கோட்டாபய ராஜபக்ச வெற்றி பெறுவார் என்று நாடு அறிந்தும் அந்த வாக்குகள் கிடைத்தன" என்றும், "இதில் ரணில் விக்ரமசிங்கவின் 10 வீத வாக்குகள் அகற்றப்பட்டால் 45 இலட்சம் வாக்குகள் கிடைத்துள்ளன. எனவே இத்தேர்தலில் 70 இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கு மேலும் 25 இலட்சம் வாக்குகளை மாத்திரமே சஜித் பிரேமதாச பெற்றுக்கொள்ள வேண்டும்" என்றும் தெரிவித்தார்.

இதனால் வெற்றிக்கு மிகவும் நெருக்கமான வேட்பாளராக சஜித் பிரேமதாசவே இருப்பதாகவும் ஏனையோர் வெற்றி பெறுவதற்கு இன்னும் 40 இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகவும் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி ரணிலுக்கு சஜித் சாவால் இல்லை

## ராஜித சேனாரட்னவின் மதிப்பீடு

"நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கருத்துக்கணிப்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவுக்கும் இடையில்தான் போட்டி. அநுர குமார திசாநாயக்க மூன்றாம் இடத்தில்தான் உள்ளார்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்தார்.

ராஜித சேனாரத்ன இங்கு மேலும் கூறுகையில், "நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புகளில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாசவுக்குமே போட்டி உள்ளது" என்றும், "அநுரகுமார திசாநாயக்க என்ன தான் ஊடக களியாட்டங்களை நடத்தி, மக்களை ஒன்று திரட்டினாலும் மூன்றாவது இடத்திலே தான் இருக்கின்றார்" என்றும் குறிப்பிட்டார்.

"கடந்த முறை காலிமுகத்திடலை நிரப்புவதாக தெரிவித்து, யாரும் செய்ய முடியாத அளவுக்கு மக்களை திரட்டி காலிமுகத்திடலை நிரப்பினார்கள். ஆனால் தேர்தலில் அவர்களுக்கு நூற்றுக்கு 3 வீதமே கிடைத்தது" என்று தெரிவித்த ராஜித சேனாரத்ன, "அதனால் அவர்களின் கூட்டங்களுக்கு மக்கள் வருகிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு மக்கள் வாக்களிக்கமாட்டார்கள்" என்றும் தெரிவித்தார்.

"இந்த நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட ஜே .வி. பி.யும் கலவரமும் காரணமாகும். அவ்வாறான வரலாற்றைக் கொண்ட ஜே .வி.பி.க்கு வாக்களிக்க மக்கள் முட்டாள்கள் அல்ல" என்றும் தெரிவித்த ராஜித சேனாரத்ன, "அவர்களின் வரலாறு தெரியாதவர்களே அவர்களுக்கு வாக்களிக்கின்றனர்.

அவர்களின் பொய் வாக்குறுதிகளை நம்பி இந்த முறை வாக்கு வீதம் அதிகரிக்கும் என நம்புகிறோம்" என்றும் தெரிவித்த அவர், ஆனால் அது தமக்கு சவால் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

"ரணில் விக்ரமசிங்க இன்னும் தேர்தல் பிரசாரத்தை முறையாக ஆரம்பிக்க வில்லை. அவ்வாறு இருந்தே சஜித் பிரேமதாசவுக்கு சமமாக அமைந்துள்ளது" என்றும் குறிப்பிட்ட ராஜித, "தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தால், சஜித் பிரேமதாசவும் எமக்கு சவால் கிடையாது" என்றும் தெரிவித்தார்.



# திருமலை இந்து – மட்டு சிவானந்தா 29 ஆவது மாபெரும் கிரிக்கெட் சமர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கல்வி சமூகம் 29 வது தடவையாக ஒழுங்கு செய்துள்ள திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீகோணேஸ்வரா இந்து கல்லூரிக்கும், மட்டக்களப்பு ,கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கட் சமர் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.




திருகோணமலை இந்து கல்லூரி அதிபர் எஸ்.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி சமரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் கே.சிவகுமார் பிரதம அதிதியாகவும், திருகோணமலை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.பரமேஸ்வரன் கௌரவ அதிதியாகவும்,சிறுவர் கல்வி உதவிகள் அம்ப்பின் சர்வதேச இணைப்பாளர் எஸ்.கங்காதரன் மற்றும் கனடா சி.ஈ.டி. கிங் குறூப் பணிப்பாளர் பெஞ்சமின் லோரன்சுப்பிள்ளை ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி அதிபர் எஸ். தயாபரன் மற்றும் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அதிபர் எஸ்.கணேசலிங்கம் ஆகியோருக்கிடையிலான கிரிக்கட் சமர் தொடர்பான கலந்துரையாடல் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.







# 5 ம் ஆண்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கருத்தரங்கு

வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றமும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும் இணைந்து எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 12.00 மணி வரை 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இலவச புலமைப் பரிசில் கருத்தரங்கு ஒன்றை வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது .

இந்தக் கருத்தரங்கில் அப்பிரதேச மாணவர்களை பங்கேற்று பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பிரதேசத்தில் சேவை செய்த முன்னாள் அதிபர் திருமதி சோதிலிங்கம் ,லயன் ஈ.தர்ஷன், கிராமசேவகர் எஸ். சிவகுமார், டொக்டர் வி.குருபரன் ஆகிய 4 பேருக்கு ''பொற்பணி செம்மல்'' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாக தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் எஸ். கே.தளையரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் தலைவர் எஸ்.ஜெயந்தன் ,மன்றத்தலைவர் உமாபதி ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

# சம்மாந்துறை, திருக்கோவில் பிரதேச செயலாளர்கள் சீனா பயணமானார்கள்



சுற்றுலா வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு எனும் கருத்திலான சர்வதேச பயிற்சி பட்டறை எதிர்வரும் ஆகஸ்ட் 29 தொடக்கம் செப்டம்பர் 11 வரை சீனாவில் இடம்பெறுகிறது.

இதில் கலந்து கொள்வதற்காக அம்பாறை மாவட்டத்தில் இருந்து சம்மாந்துறை பிரதேச செயலாளர் மற்றும் திருக்கோவில் பிரதேச செயலாளர் ஆகியோர் பயணித்துள்ளனர்.

அரசாங்கத்தின் உறுமய தேசிய வேலைத் திட்டம், உற்பத்தி திறனாய்வு போட்டி மற்றும் சமுக பாதுகாப்பு சபை ஆகியவற்றில் தேசிய ரீதியாகவும், சிறப்பாகவும் செயற்பட்டவர்கள் என்ற வகையில் இந்த தெரிவு இடம்பெற்று இருக்கின்றது.

# கட்சி ஆதரவாளர்கள் மோதல் பொலிஸாரால் ஒருவர் கைது

மினுவாங்கொடை பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவரை வாளினால் தாக்கி காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் காயமடைந்தவரது வீட்டிற்கு சென்று தகராறில் ஈடுபட்டுள்ள நிலையில் வீட்டிலிருந்த பூந்தொட்டிகளை உடைத்து வாளினால் தாக்கியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, காயமடைந்தவர் மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவரது ஒரு கையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






# இஞ்சியின் விலை மீண்டும் உயர்வு!

இஞ்சியின் விலை 3,200 ஷரூபாவாக அதிகரித்துள்ளதால் நுகர்வோரின் தேவை குறைநதுள்ளது. கடந்த வாரம் சற்று குறைவடைந்திருந்த விலை மீண்டும் அதிகரித்திருப்பதாகத் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

விவசாயிகள் விதை இஞ்சியை விற்பனை செய்வதன் மூலம் விரைவாக இலாபம் ஈட்டுவதாகவும், ஆனால் மருத்துவ குணம் கொண்ட இஞ்சி அல்லது உள்ளூர் இஞ்சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர்.

அத்தோடு, அண்மையில் பெய்த பலத்த மழையினால் பயிர்கள் நாசமடைந்து இஞ்சி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## முறாவில் சித்தி விநாயகர் வருடாந்த பெருந்திரு விழா நாளை ஆரம்பமாகிறது

தென்புலோலியூர் - முறாவில் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திரு விழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்தப் பெருந்திருவிழாவில் ஐந்தாம் திருவிழாவான எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை கதவு சாத்தி தேவாரம் பாடி திருக்கதவு திறக்கப்படும். ஆறாம் திருவிழாவான செவ்வாய்க்கிழமை மாம்பழத் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் செப்ரெம்பர் 5ஆம் திகதி வியாழக்கிழமை சப்பைரதத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

துன்னாலை அல்லையம்பதி சாரதா பீடத்தைச் சேர்ந்த கிரியா கிரமஜோதி சிவசிறீ ராம்சபாநாதக் குருக்கள் பிரதம குருவாகஇருந்து பெருந் திருவிழாவை நடத்திவைப்பார்.

## நெல் கொள்வனவு நேற்று ஆரம்பம்!

*இந்த வருடத்திற்கான நெல் கொள்வனவு நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.*

*இதற்காக அரசாங்கம் 2000 மில்லியன் ஷரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதன் முதற்கட்டமாக விவசாயிகளிடமிருந்து 500 மில்லியன் ஷரூபாய் பெறுமதியான நெல்கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதன்படி ஒரு கிலோ கிராம் நாட்டரிசி நெல் 120 ஷரூபாவிற்கும், ஒரு கிலோ கிராம் கீரி சம்பா நெல் 130 ஷரூபாவிற்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.08.2024இல் வெளியிடப்பெற்றது.